**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 9 October 2022

# புதிய பேராசிரியர் இருக்கை, கல்வி உபகாரச் சம்பளங்கள்

சிங்கப்பூர் தேசிய பல்ககைக்கழகத்தின் யோங் லூ லின் மருத்துவப்பள்ளியின் மகளிர், மகப்பேறு மருத்துவத் துறையில், அந்தத் துறையின் ஊழியர்களே இரண்டு கல்வி உபகாரச் சம்பளங்களையும் ஆய்வுப் பேராசிரியர் இருக்கை ஒன்றையும் ஏற்படுத்தி உள்ளனர்.

அந்தத் துறை இந்த மாதம் தனது 100வது ஆண்டுவிழாவைக் கொண்டாடுகிறது. அதையொட்டி நேற்று ராஃபிள்ஸ் சிட்டி மாநாட்டு மையத்தில் நூற்றாண்டு விழா கூட்டம் நடந்தது.

அதில் இந்த ஏற்பாடுகள் பற்றி அறிவிக்கப்பட்டது.

அந்தத் துறையைச் சேர்ந்த மூத்த ஆலோசகர் பேராசிரியர் குல்திப் சிங், மொத்தம் $1 மில்லியன் வழங்கி இருக்கிறார்.

அதைக் கொண்டு மகளிர், மகப்பேறு மருத்துவத்தில் ‘குல்திப் சிங் வருகை பேராசிரியர் இருக்கை’ தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக தோற்றுவிக்கப்பட்ட கல்வி உபகாரச் சம்பளங்களில் ஒன்றுக்கு ‘சபாரத்னம் அருள் குமரன் கல்வி உபகாரச் சம்பளம்’ என்று பெயர். இதற்காக இன்றைய தேதியில் $300,000 திரட்டப்பட்டு உள்ளது.

‘மகளிர், மகப்பேறு மருத்துவத் துறை நூற்றாண்டு கல்வி உபகாரச் சம்பளம்’ என்ற இரண்டாவது கல்வி உதவி ஏற்பாடு பற்றியும் நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்தத் துறையைச் சேர்ந்த ஆலோசகர்களும் மூத்த ஆலோசகர்களுமாக 26 பேர் இந்தக் கல்வி உபகாரச் சம்பளத்திட்டத்திற்காக $750,000 வழங்கி இருக்கிறார்கள்.

அதிபர் ஹலிமா யாக்கோப் நேற்று நடந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.